(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்

விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

9 சைவசமய பாடப்பரீட்சை : 2023

தரம் ஒன்பது

nselva.com



காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இறைவனின் அடியைத் தேட பன்றி வடிவம் எடுத்து பூமியை அகழத் தொடங்கியவர்
   1) பிரமா 2) விஷ்ணு 3) சிவன் 4) இந்திரன்
2. ''பஞ்சாட்சர பதிகம்'' பாடிய நாயனார்
   1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) நாவுக்கரசர் 4) மாணிக்கவாசகர்
3. பஞ்சாங்கத்தில் உள்ள திதிகள் எத்தனை?
   1) 16 2) 30 3) 32 4) 60
4. பின்வருவனவற்றில் பட்ச விரதம் எது?
   1) கார்த்திகை விரதம் 2) பங்குனி உத்திர விரதம்
   3) நவராத்திரி விரதம் 4) சதுர்த்தி விரதம்
5. கேதாரகௌரி விரதம் எந்த முனிவரின் ஆலோசனைப்படி உமாதேவியாரால் அனுஷ்டிக்கப்பட்டது.
   1) கௌதம முனிவர் 2) கருடமுனிவர்
   3) அகத்திய முனிவர் 4) கௌசிக முனிவர்
6. மகரசங்கிராந்தி எனக் கூறப்படுவது
   1) ஆடிப்பிறப்பு 2) ஆவணிச்சதுர்த்தி 3) தைப்பொங்கல் 4) சிவராத்திரி
7. திருமால் புகழ் பாடிய ஆழ்வார் யார்?
   1) பூதத்தாழ்வார் 2) பொய்கையாழ்வார்
   3) திருமழிசையாழ்வார் 3) குலசேகராழ்வார்
8. ''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' எனப் போற்றப்படுபவர்
   1) காரைக்கால் அம்மையார் 2) மங்கையரக்கரசி நாயனார்
   3) திலகவதியார் 4) ஆண்டாள் நாச்சியார்
9. பாண்டியமன்னன் நெடுமாறனின் அமைச்சராக விளங்கியவர்
   1) நமிநந்தியடிகள் 2) குலச்சிறையார்
   3) சேக்கிழார் 4) அருமருந்தபாண்டியன்
10. பின்வருபவர்களுள் எவர் இராமகிருஷ்ணமிஷின் ஊடாக சமய எழுச்சியை ஏற்படுத்தியவர்?
    1) சேர். பொன். இராமநாதன் 2) சேர். பொன். அருணாசலம்
    3) சு. இராசரத்தினம் 4) விபுலானந்த அடிகளார்

11. மனித வாழ்க்கையில் பிரமச்சரியம் என்னும் படிநிலை எதனைக் குறிக்கும்.
1) மாணவ நிலை 2) கிருகஸ்தம் 3) வானப்பிரஸ்தம் 4) சந்நியாசம்

12. 'பிதிர் கடன்' செய்வதற்கு உகந்த தலமல்லாதது பின்வருவனவற்றில் எது?
1) முன்னேஸ்வரம் 2) கேதீஸ்வரம் 3) மாமங்கம் 4) கீரிமலை

13. கோயில்களில் யாகங்கள் செய்வதற்கான காரணம்
1) இறைவனைத் திருப்திப்படுத்த 2) பூசாரிமாரை திருப்திப்படுத்த
2) தேவர்களைத் திருப்திப்படுத்த 4) மக்களைத் திருப்திப்படுத்த

14. கண்ணப்பநாயனார் தன் கண்ணைத் தோண்டி இறைவனுக்குக் கொடுக்க நினைத்தபோது அவரைத் தடுத்து நிறுத்திய இறைவன்
1) கொடுமுடி நாதர் 2) திருக்குறுக்கை வீரட்டானர்
3) சோம சுந்தரேஸ்வரர் 4) தான்தோன்றீஸ்வரர்

15. சைவ நாற்பாதங்களுள் எது காயிற்கு ஒப்பிடப்படுகிறது?
1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்

16. பின்வருவனவற்றில் எவர் கிரியை நெறி நின்று வழிபட்டவர்.
1) திலகவதியார் 2) குங்கிலியக்கலயர்
3) சேரமான் பெருமான் நாயனார் 4) பூசலார் நாயனார்

17. சூரனை வதம் செய்வதற்காக முருகப்பெருமானுடன் பாத யாத்திரை மேற்கொண்டவர்.
1) இந்திரன் 2) நெடுமாறன் 3) குலச்சிறையார் 4) வீரபாகு

18. உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்ற பாடலை பாடியவர்.
1) கச்சியப்பர் 2) அருணந்திசிவாச்சாரியர்
3) விபுலானந்த அடிகள் 4) அருணகிரிநாதர்

19. ஐயப்ப பக்தர்கள் செல்லும் சபரிமலை இந்தியாவில் எங்கு அமைந்துள்ளது.
1) கேரள மாநிலத்தில் 2) தமிழ் நாட்டில்
3) கர்நாடக மாநிலத்தில் 4) வட இந்தியாவில்

20. பாண்டிய மன்னனுடன் பாண்டி நாட்டுத் தலங்களுக்கு யாத்திரை செய்த நாயனார்.
1) ஞான சம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்க வாசகர்

21. சம்பந்தரின் தாயாரின் ஊரின் பெயர் என்ன?
1) திருக்கொடிமாடச் செங்குன்றூர் 2) திருநனிபள்ளி
3) திருநல்லூர் 4) திருவையாறு

22. மயிலுக்குப் போர்வை கொடுத்தவர் யார்?
1) பேகன் 2) பாரி 3) அதியமான் 4) சிபிச்சக்கரவர்த்தி

23. பஞ்ச பூதங்களுள் அடங்காதது
1) நிலம் 2) நீர் 3) வீடு 4) ஆகாயம்

24. திருமாலுக்கு சக்கரப்படையை அருளிச்செய்தவர் யார்?
1) பிள்ளையார் 2) முருகன் 3) அம்மன் 4) சிவபெருமான்

25. இறைவனால் 'அம்மையே' என அழைக்கப்பெற்றவர்.
1) திலகவதியார் 2) புனிதவதியார்
3) மங்கையர்க்கரசியார் 4) உமாதேவியார்

26. திருப்புகழ் எந்தக்கடவுளின் புகழைப் போற்றிப் பாடப்பட்டது?
1) முருகன் 2) சிவபெருமான் 3) பிள்ளையார் 4) திருமால்

27. மதுரை வீரனுக்கு பொங்கல் படைத்து வழிபடும் முறை இலங்கையில் எங்கு காணப்படுகிறது.
1) யாழ்ப்பாணம் 2) மட்டக்களப்பு 3) மலையகம் 4) வன்னிப்பகுதி

28. கிறிஸ்தவ மக்களின் புனித நூல் எது?
1) குர்ஆன் 2) பகவத்கீதை 3) மகாபாரதம் 4) திருவிவிலியம்

29. திருமந்திரத்தைப் பாடியவர் யார்?
1) சேக்கிழார் 2) திருமூலநாயனார்
3) திருநாவுக்கரசு நாயனார் 4) மாணிக்கவாசகர்

30. திருமுறைகளில் ஒன்பதாவது திருமுறையாக தொகுக்கப்பட்ட நூல் எது?
1) திருவாசகம் 2) திருவிசைப்பா 3) பெரியபுராணம் 4) தேவாரம்

(30x1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. சம்பந்தப்பெருமானுக்கு திருமணம் நடந்த தலம் எது?
2. இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமானவர்களைக் கிரகங்கள் பாதிக்காது என்பதின் கருத்துப்படி ஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் பெயர் என்ன?
3. ''சித்தாந்த சிகாமணி'' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர் யார்?
4. ''யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி'' என்று விரும்தோம்பலின் சிறப்பினை எடுத்துரைத்தவர் யார்?
5. நமது உள்ளத்திற்கு ஒளியைத் தருகின்ற நல்ல விளக்காக அமைவது எது?
6. விநாயகரை அர்ச்சிப்பதற்கு சிறந்த புல் வகை எது?
7. தேவர்களின் பகல் பொழுது பூமியின் எந்த வகைக் காலத்தைச் சேர்ந்தது?
8. திருமால் அடியார்கள் எப்பெயரால் அழைக்கப்படுவார்கள்?
9. சன்மார்க்கம் என அழைக்கப்படுவது?
10. சேற்றில் அமர்ந்த தேர் தானே அசைந்தோடும் வண்ணம் வாழ்த்திப் பாடியவர் யார்?
11. காவேரி ஆறு பிரிந்து வழிவிடச்செய்த அற்புதத்தைச் செய்த நாயனார் யார்?

(11 புள்ளிகள்**)**

12. பின்வரும் சிவபுராணத்தில் அடுத்து வரும் நான்கு அடிகளை மட்டும் எழுதுக.
''ஈசனடி போற்றி எந்தையடி போற்றி .....''

(04 புள்ளிகள்**)**

பகுதி - III

1. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "மற்றுப் பற்று....." 2. "துஞ்சலும் துஞ்சல் ....."
3. "காப்பதோர் வில்லும் அம்பும் ....." 4. "எளிய நல் தீபமிடல் ....."

(2x7 =14 புள்ளிகள்**)**

2. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

1. "ஒருமையுள் ஆமை போல் ....." 2. "ஒழுக்கத்தில் எய்துவர் ....."
3. "அறன் வரையான் ....." 4. "உலகத்தோடு ஒட்ட ....."
5. "பிறன்மனை நோக்காத ....." 6. "ஒன்றானும் தீச்சொல் ....."

(1x5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - IV

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1. விழுமியங்கள் என்றால் என்ன?
2. திரிகரணங்கள் எவை?
3. மனக்கட்டுப்பாட்டிற்கான சாதனங்கள் எவை?

(9 புள்ளிகள்**)**

2. 1. சைவப்புலவர் கா. அருணாசல தேசிகர் பிறந்த ஊர் எது?
2. இவர் நடத்திய சொற்பொழிவுகளில் காணப்பட்ட வலியுறுத்தப்பட்ட விடயங்கள் மூன்று எவை?
3. தேசிகர் எழுதிய நூல்கள் நான்கின் பெயரைத் தருக?
4. தேசியருடன் நெருங்கிய உறவில் இருந்த முத்தமிழ் வித்தகர் யார்?

(1 + 3 + 4 +1 = 9 புள்ளிகள்**)**

3. 1. சிவபெருமான் மன்மதனை எரித்த தலம் யாது?
2. அத்தலத்திலே இரு திருப்பதிகங்களைப் பாடிய நாயனார் யார்?
3. அப்பதிகங்களில் ஒன்று எதனை எடுத்துரைக்கின்றன. அதில் உள்ள 7வது பாடல் எந்த அடியாரைப் பற்றியது?

(9 புள்ளிகள்**)**

4. 1. பின்வரும் கடவுளுக்குரிய சிறப்பு திருநாள் நட்சத்திரங்கள் எவை?
அ. சிவபெருமான்
ஆ. திருமால்
இ. அம்பிகை
2. ஆடி மாதத்தில் கோயில்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகள் மூன்று தருக?
3. ஆடி மாதத்தில் பிறந்த ஒரு பெண் ஆழ்வார் யார்?
4. அவருக்கு வழங்கப்படும் வேறு ஒரு பெயர் என்ன?
5. அவர் யார் மீது அன்பு கொண்டு பாடல்களைப் பாடினார்?

(3 + 3 + 1 + 1 + 1 = 9 புள்ளிகள்**)**

5. 1. கதிர்காமம் அமைந்துள்ளது (அ) மாகாணம் (ஆ) மாவட்டம் என்பவற்றைத் தருக?
2. கதிர்காமத்திற்கு பாதயாத்திரையை மேற்கொண்ட சித்தர்கள் இருவர் பெயரைத் தருக?
3. கதிர்காமம் பாதயாத்திரை செல்லும்போது கடக்க வேண்டிய மூன்று காட்டுப்பகுதிகளைக் கூறுக?
4. (அ) கதிர்காம பாத யாத்திரை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கும் இடம் எது?
(ஆ) அப்பாத யாத்திரிகள் தங்கிச் செல்லும் அம்மன் ஆலயம் ஒன்று தருக?

(2 + 2 + 3 + 2 = 9 புள்ளிகள்**)**